Government come forward to find out suitable areas and grow vegetables on a large scale for sending them to foreign countries and earning foreign exchange?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: உலக பாங்கைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டார்களா என்பதற்கு தகவல் இப்பொழுது இருக்கவில்லை. அப்படி நிலைமை இருக்குமானால், அரசாங்கம பரிசீலிக்கலாம். இப்பொழுது அந்த நிலைமை இல்லை.

திரு. எஸ். அக்னிராஜு: சில வங்கிகள் தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு இப்பொழுது கடன கொடுத்து வருகின்றன. காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு அப்படிப்பட்டக் கடனை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்தக் கடன் வேளாண்மைத் துறை மூலமாகத்தான் விவசாயிகளுக்குத் தரப்பட்டுவருகிறது. பாங்குகளின் மூலமாகவும், ஊராட்சி ஒன்றிப்புகளின் மூலமாகவும் தருகின்ற விவரம் இல்லை.

Firms black listed in City

* 683 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(*a*) whether the Commercial Taxes Department has black listed firms in Madras City during 1968–1969–1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

சித்திரைப் பொருட்காட்சியில் கேளிக்கை வரி விலக்கு

*** 684 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, மதுரையில் நடைபெற்ற "சித்திரைப் பொருட்காட்சியில்" ஏற்பாடு செய்யப்பட்ட சினிமா, நடன, நாடக நிகழ்ச்சிகளுக்கு "கேளிக்கை வரி"யிலிருந்து விலக்கு அல்லது சலுகை அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) & (இ) நடனம், நாடகம் இவற்றிற்கு கேளிக்கை வரி இல்லை. ஆனால் திரைப்படக் காட்சிகளுக்கு கேளிக்கை வரி உண்டு. 1969-ம் ஆண்டு மதுரையில் நடந்த சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளுக்கு, கேளிக்கை வரியினின்றும் விலக்கு அளிக்கப்படவில்லை.